நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 , மேட்டூர்.

**CC. No. 329/2016**

**D.W.1 –ன் வாக்குமூலம்**

**(எதிரிதரப்பு சாட்சி)**

..........

| | | |
|---|---|---|
| பெயர் | : | ஜெயபிரான்சிஸ் செல்வகுமார் |
| தந்தை / கணவர் பெயர் | : | பால்தனராஜ் |
| கிராமம் | : | திருவொற்றியூர், சென்னை |
| வட்டம் | : | சென்னை–19 |
| மாவட்டம் | : | சென்னை |
| சாட்சி வரிசை எண் | : | **DW1** |
| வயது | : | 51 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று* ***2026–ஆம் வருடம்,*** **செப்டம்பர் மாதம்,** ***09 –ஆம் தேதி*** பதிவு *செய்யப்பட்டது.*

**இருத்தரப்பினரும் ஆஜர். அவர்களது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:– 1.16 PM

1. நான் தற்போது வடச்சென்னை அனல் மின்நிலையத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வருகிறேன். எண்ணூர் அனல் மின்நிலையத்தில் சிறப்பு அயல் பணியாளராக வேலை செய்து வருகிறேன். எண்ணூர் அனல் மின்நிலையத்தின் தலைமை பொறியாளர் அவர்கள் இந்த வழக்கில் ஆவணங்களை தாக்கல் செய்து சாட்சியம் அளிப்பதற்காக எனக்கு கொடுத்த அங்கீகாரக் கடிதத்தின் அடிப்படையிலும் மேற்படி தலைமை பொறியாளருக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்த அழைப்பாணை அடிப்படையிலும்

ஆஜராகி சாட்சியம் அளிக்கிறேன். ( **மேற்படி 08.09.2026 ம் தேதியிட்ட அங்கீகார கடிதம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

2. மேலும் மேற்படி அழைப்பாணையில் கேட்கப்பட்ட மேற்படி அனல்மின்நிலையம் செயல்பாடு நிறுத்தப்பட்டு மூடப்பட்டதால் வருகைப்பதிவேடு விவரங்கள் உள்ளிட்ட அனைத்து கடித போக்குவரத்து உள்ளிட்ட அலுவல் ஆவணங்கள் அழிக்கப்பட்டுவிட்டன. பணிபதிவேடு மட்டும்தான் பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனடிப்படையில் அழைப்பாணையில் குறிப்பிடப்பட்ட சிவானந்தம் என்பவர் கடந்த 23.06.1995 ம் தேதி பணியில் சேர்ந்து 30.05.2025 ம் தேதி பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதால் அவர் பணிஓய்வு பெற அனுமதிக்கப்படவில்லை. அதுசம்மந்தமாக எண்ணூர் அனல் மின்நிலையத்தின் தலைமை பொறியாளர் கொடுத்த அறிக்கையை தாக்கல் செய்கிறேன். ( **08.09.2026 ம் தேதியிட்ட அறிக்கை எ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. )**

3. மேற்படி அழைப்பாணையில் குறிப்பிட்ட சிவானந்தம் என்பவர் இறுதியாக தலைமை பொறியாளர், மெக்கானிக்கல் தெர்மல், 144, 3வது மாடி, அண்ணாசாலை, சென்னை என்ற முகவரியில் தான் பணிபுரிந்து வந்தார். மேற்படி தலைமை பொறியாளர் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில்தான் மேற்படி விவரங்கள் தாக்கல் செய்துள்ளோம்.

**குறுக்கு விசாரணை அவசியம் இல்லை என தெரிவிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:—1.30 PM

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்து படித்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஒம்/—நா.கோபாலகிருஷ்ணன்**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**